Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 24 இதழ் - 6 ஜூன் 2011

தனிப் பிரதி ரூ. 8/-



# திருமறை தியானம்
# தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை .................................... 1
2. ஏன் நாங்கள் ஞானஸ்நானம் பெறுகிறோம்? ....... 10
3. பெண்கள் பகுதி .................................... 15
4. வாலிபர் பகுதி .................................... 18
5. சிறுவர் பகுதி .................................... 22
6. துருவின் சாட்சி .................................... 24
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......... 28


### வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

- ஆசிரியர்

# THIRUMARAI AASAAN



S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385



Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 24 JUNE - 2011 Issue - 6**


ஆசிரியர் உரை

## "மனங்கசந்து அழுதான்"

பரலோகத்தின் தேவனால் மானிடம் வாழ்வதற்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இப்பூமி உருண்டையின் எத்திக்கிலும் வாழும் மனித இனம் அனைத்திற்கும் பொதுவாக இருக்கும் அநேக காரியங்களில் ஒன்று அழுகை. ஆம், நான் அழுததே இல்லையென்றோ, அழுகை பற்றி எனக்குத் தெரியாது என்றோ, அழுதவர்களை நான் பார்த்ததே இல்லையென்றோ ஒருவரும் சொல்ல முடியாது. சொல்லப்போனால், மனிதனுடைய பிறப்பும், இறப்பும் ஒருவகையில் அழுகையோடு சம்பந்தப்பட்டே இருக்கிறது. இவ்விரண்டு நிகழ்வுகளின் போது மாத்திரமல்ல, மனிதன் இப்பூவுலகில் வாழ்கின்ற காலத்திலும் அழுகை அவனை விட்டு விலகி நிற்பதில்லை. ஒருவேளை, சிரிக்காமல் வாழ்க்கையை ஓட்டுகிறவர்களை முயன்றால் கண்டுபிடித்து விடலாமோ என்னவோ தெரியவில்லை, ஆனால், அழாமல் வாழ்க்கை நடத்துகிறவர்களை நாம் கண்டுபிடிக்கவே முடியாது.

இப்படி, மனுக்குலம் முழுவதையும் ஏகமாய் பாதித்திருக்கும் அழுகை பற்றிய சம்பவங்கள் பரிசுத்த எழுத்துக்களால் நிறைந்திருக்கும் வேதாகமத்தின் பக்கங்களிலும் இடம் பெறத் தவறவில்லை. அப்படி இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு அழுகைக்கான காரணமும், அந்த அழுகையின் தன்மையும் நமக்கு ஆவியானவரால் கொடுக்கப்படாமலில்லை.

ஆம், ஆபிரகாமுக்கு மறுமனையாட்டியாகத் திணிக்கப்பட்ட ஆகார் என்னும் அடிமைப் பெண், பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று "சத்தமிட்டு" அழுததாகப் பார்க்கிறோம் (ஆதி. 21:16). அடுத்து, பலவருண அங்கி யோசேப்பு, தன்

தகப்பன் யாக்கோபு மரித்த போது, "முகத்தின் மேல் விழுந்து" அழுதான் (ஆதி. 50:1) என்று சொல்லப்பட்டுள்ளது. இன்னும், ஆசாரியனாகிய எஸ்றாவின் நாட்களில் இடிக்கப்பட்ட ஆலயத்திற்கு மீண்டும் அஸ்திபாரம் போடப்பட்ட போது, கூடியிருந்தவர்கள் "மகா சத்தமிட்டு" அழுததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (எஸ்றா 3:12). மேலும், சிக்லாக் என்னும் பட்டணம் கொள்ளை போய்த் தீக்கிரையாக்கப்பட்டு, அதிலிருந்தவர்கள் சிறைப்பட்டுப் போன போது, தாவீதும், ஜனங்களும், "பெலனில்லாமல் போகுமட்டும்" அழுதார்கள் என்று வாசிக்க முடியும். (1 சாமு. 30:4) ஆனால், மேலுள்ள சம்பவங்களில் அழுதவர்கள் யாரும் மனங்கசந்து அழுததாக வேத வசனங்களில் சொல்லப்படவில்லை. அது மாத்திரமல்ல, மேலுள்ள சம்பவங்களுக்குச் சம்பந்தமான தேவ மனிதர்கள் யாரும், செய்த பாவத்திற்காக அழுததாகவும் நமக்குச் சொல்லப்படவில்லை.

இதன் மூலம், செய்த பாவத்திற்காக, மனங்கசந்து அழுத சம்பவம் ஒன்று தான் உள்ளது என்று தெரிகிறது. ஏன், சங்கீதம் 51-ஐ வடித்த தாவீது சம்பந்தப்பட்ட சம்பவம் இல்லையா என்று ஒருவேளை நீங்கள் கேட்கக் கூடும். நியாயம் தான். ஒரு வேளை, அவன் அங்கே அழுதிருக்கலாம். ஆனால், தாவீது தன் பாவச் செயல்களுக்காக மனங்கசந்து அழுதான் என்று நேரிடையான வார்த்தைகள் வேத வசனங்களில் இல்லை. ஆகவே தான், வேறு சம்பவம் இல்லை என்று கூறுகிறேன். இந்த ஒற்றைச் சம்பவத்துக்குச் சொந்தக்காரன் அப்போஸ்தலன் பேதுரு. இந்தச் செம்படவனை அப்போஸ்தலன் பேதுரு என்பது சரியாக இருக்குமா அல்லது தடுமாற்றப் பேதுரு என்றழைப்பது பொருத்தமாக இருக்குமா என்பது விவாதத்திற்குரியது என்று சொன்னால் கூடத் தவறில்லை! ஏனெனில், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பான இவனுடைய சீஷத்துவ வாழ்க்கையில் இவன் கடந்து வந்த பாதை அப்படிப்பட்டது.

எது எப்படியிருந்தாலும், சபை சரித்திரத்தின் ஆரம்ப காலத்தில், தன்னிகரில்லாத் தனது செயல்பாட்டின் மூலம் முத்திரை பதித்த இம்மாமனிதன் ஒரு தனித்துவம் வாய்ந்தவனே. எப்படியெனில், இரட்சகர் இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடர்களில் ஒருவன் இவன் (லூக். 5:10). ஆவியானவரால் கொடுக்கப்பட்டிருக்கும் சீடர்களின் பட்டியலில் எப்பொழுதும் முதல் இடத்தைப் பிடிப்பவன் இவனே (மத். 10:2). அத்தோடு, இயேசுவின் மூன்று உள்வட்டச் சீடர்களில் ஒருவன் (மாற். 5:37) சீடர்கள் எல்லோரின் சார்பாகவும் பேசக் கூடியவன் (மத். 15:15; 18:21). இன்னும் சொல்லப்போனால், சீடர் பட்டாளத்தின் ஏகபோக பிரதிநிதி இவன். (மத். 16:14; மாற். 8:21), இப்படிச் சீர்கள் பலவற்றுக்குச் சொந்தமான இந்தப் பேதுருதான், தன் பாவச்செயலுக்காக மனங்கசந்து அழுதுள்ளான்.

சரி, இந்தத் தடுமாற்றப் பேதுரு, எந்தச் சூழ்நிலையில் இப்படி மனங்கசந்து அழுதான் என்றும், அதன் பின்னணி என்ன என்றும் இப்பொழுது கவனிப்போம்.

மூன்றரை ஆண்டுகள் பெலஸ்தீனா தேசம் எங்கும் சுற்றி நடந்து ஊழியம் செய்த இயேசு ஆண்டவர், எருசலேமில் இருந்த ஒரு மேல் வீட்டில் தன் கடைசிப் பஸ்கா விருந்தை ஓர் அசாதாரண சூழ்நிலையில் கடைப்பிடித்தார் (லூக். 22:12). அப்போது, சீடர்களோடு ஓர் உரையாடலை ஆரம்பித்து, ஒரு பெரிய வாக்குத்தத்தோடு நிறைவு செய்தார். ஏனெனில், அவருடைய சீடர்கள் எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றதோடு, அவருக்கு நேர்ந்த சோதனைகளில் அவரோடு கூட இருந்தவர்கள் (மத். 19:27; லூக். 22:28). நீங்கள் என் ராஜ்ஜியத்திலே என் பந்தியில் போஜனபானம் பண்ணி, இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள் (லூக். 22:30) என்பதே அந்த வாக்குத்தத்தம்.

இப்படி ஒட்டுமொத்த சீடர்களைப் பார்த்துப் பேசின இயேசு ஆண்டவர், அங்கே பேதுருவின் பக்கம் திரும்பிப் பேசத் தொடங்கி, .... சீமோனே, சீமோனே, இதோ கோதுமை யைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்திரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார் (லூக். 22:31-33). அதற்குப் பேதுரு, ஆண்டவரே, காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான் (லூக். 22:31-38). இயேசுவின் கூற்றுக்கு மாறாக இவன் பதில் இருந்த பொழுது இயேசு இவ்விதம் சொன்னார். "சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்று தரம் மறுதலிப்பாய்" என்று (லூக். 22:34).

இதைத் தொடர்ந்து இயேசுவுக்கு எதிரான காரியங்கள் வெகு விமரிசையாக நடந்தது. பன்னிரெண்டு பேரில் ஒருவனாகிய யூதாஸ், அன்பின் சின்னமான முத்தத்திற்குத் தீராத களங்கம் கற்பித்து, அதை துரோகத்தின் சின்னமாக மாற்றி இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். அப்பொழுது, இயேசுவானவர் கைது செய்யப்பட்டு, பிரதான ஆசாரியர் வீட்டிற்குக் கூட்டிச் செல்லப்பட்டார். இந்தச் சூழ்நிலையில் தான், காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றுவேன் என்று வாய் நீளத்தோடு பேசின நம் தடுமாற்றப் பேதுரு, இயேசுவுக்கு அருகில் பின்பற்றப் பயந்து தூரத்திலே பின் சென்றான். இயேசுவை "தூரத்திலே பின்பற்றுவது" அன்றும் சரி, இன்றும் சரி மிகவும் ஆபத்தானது. இவன் தூரத்திலே பின்பற்றினபடியால், அவன் பிரதான ஆசாரியனுடைய வீட்டுக்கு வந்த போது, தன்னை அங்கிருந்த யாருக்கும் தெரியாது என்ற நினைப்பு வந்தது. அதன் விளைவு, நெருப்பை மூட்டி உட்கார்ந்தவர்களுக்கு நடுவிலே போய் அசட்டு தைரியத்துடன் உட்கார்ந்தான்.

இவன் யார் என்பது மற்றவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. ஆனால், இவனுக்கோ, தான் யார் என்று மற்றவர்களுக்குத் தெரியாது என்ற நினைப்பு இருந்தது! இன்றைக்கும்

மிகப் பெரும்பாலான கிறிஸ்தவர்களால் நடப்பிக்கப்படும் அநேக தீமைகளுக்கும், பாவ காரியங்களுக்கும் அடிப்படை பேதுருவுக்கு இருந்தது போன்ற தவறான நினைப்பு தான். இப்படிப்பட்ட நினைப்பு தான், நான் எதை வேண்டுமானாலும் செய்யலாம், எங்கு வேண்டுமானாலும் போகலாம், என்ன வேண்டுமானாலும் பேசலாம், எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்று ஒருவனைத் துணிகரங் கொள்ளச் செய்கிறது. இக்கேடான நினைப்பு கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

அடுத்த வசனத்தில் என்ன நடந்தது என்று தெரியும் தானே! அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை உற்றுப் பார்த்து; இவனும் அவனோடிருந்தவன் என்றான் (22:56). அதற்கு, மனுஷனே, நான் அல்ல என்றான். இப்படிப்பட்ட அவன் சொல்லி காவலி லும், சாவிலும் உம்மைப் பின்பற்றுவேன் என்று சொன்ன பேதுரு, ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான். நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும். சற்று நேரத்துக்குப் பின் வேறொருவன் அவனைக் கண்டு; நீயும் அவர்களில் ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு, மனுஷனே, நான் அல்ல என்றான். இப்படி அவன் சொல்லி குறு,குறு நெஞ்சோடு கூனிக் குருகி உட்கார்ந்திருந்த போது, ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் பின்பு, வேறொருவன் அவனைப் பார்த்து, மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன் தான் என்று சாதித்தான். அதற்குப் பேதுரு ''மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன்'' என்றான். அவன் இப்படிச் சொன்னவுடனே, இயேசுவின் கூற்று மெய் என்பதை ஊர் அறியும் படியாகச் சேவல் கூவிற்று (லூக். 22:57-68).

அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை "உடனே" பேதுரு நினைவு கூர்ந்து, வெளியே போய் "மனங் கசந்து" அழுதான் (22:61,62). பேதுரு, தான் கர்த்தருக்கு விரோதமாகச் செய்த செயலுக்காக அழுதான். அவருடைய வார்த்தைகளை உடனே நினைத்து அழுதான். பேதுருவின் அழுகை வேதாகமத்தின் பிற அழுகைகளிலிருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுவதோடு, அவனை மிகவும் உயர்த்தியும் காட்டுகிறது. தடுமாறித் தவறு செய்திருந்தாலும், கர்த்தரின் ஊழியத்தைத் தலைமையேற்றுச் செய்யும் தகுதி தனக்கிருக்கிறது என்பதை அந்த அழுகை தம்பட்டம் அடித்துக் காட்டுகிறது.

எப்படியெனில், அதே மேல் வீட்டில், அந்தப் பஸ்கா விருந்தின் போது இயேசுவோடிருந்து, பிறகு தடுக்கி விழுந்த வேறொரு சீடன் பற்றியும் நாம் வேத வசனங்களில் காண முடியும். இவனுக்கும் சில சிறப்புகள் உரிமையாக உள்ளன. 12 பேரில் ஒருவனாக இருக்கும் பாக்கியம் பெற்றவன். பணத்தைக் கையாளுவதில் திறன் பெற்றவன். பஸ்கா விருந்திலும் இவனுக்கு அனுமதி கிடைத்தது. அவன் பெயர் யூதாஸ் காரியோத்து. அந்த

விருந்தின் போது, இயேசு, உங்களில் ஒருவன் என்னைக் கூட்டிக் கொடுப்பான் என்ற ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார். அது நாலாப் பக்கமும் சிதறி, எல்லாரும் வேர்க்க விறுவிறுக்க நானோ, நானோ என்று பதறிய போது, இசேுவைக் காட்டிக் கொடுக்க ஏற்கனவே விலை பேசி விட்ட யூதாஸ், தன் சதிச் செயலை அப்படியே விழுங்கி ஏப்பம் போட்டு விட்டு, ஏதும் அறியாத அப்பாவி போல, "ரபீ நானோ" என்று கேட்டான். நீ சொன்னபடி தான் என்று இயேசு நெத்தியடியாய்ப் பதிலுரைத்த போது, இந்தக் கல் நெஞ்சக்காரனின் இதயத்தின் ஏதாவது ஓர் ஓரத்தில் கொஞ்சமாவது ஈரம் இருந்திருந்தால், ஐயோ, குட்டு வெளியாகி விட்டதே என்று பயந்து நடுங்கி, அப்படியே நெடுஞ்சாண் கிடையாய் அவர் பாதத்தில் சரணாகதி அடைந் திருப்பான். ஆனால், இவன் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளா மல், அந்தப் பஸ்கா விருந்தில் பங்கு பெற்றதோடு, தன் சதிச் செயலையும் திட்டமிட்டபடி அரங்கேற்றியுள்ளான்!.

பேதுரு, யூதாஸ் ஆகிய இரண்டு பேரும் இயேசுவின் சீடர்கள் தான். இயேசுவுக்கு உண்மையாக இருக்க வேண்டிய வர்கள். ஆனால், இரண்டு பேரும் துரோகம் செய்து விட்டார்கள். இது, இரண்டு பேருடைய சீஷத்துவ வாழ்க்கையிலும், மிக மோசமான திருப்பத்தை ஏற்படுத்தியது என்பதில் சந்தேக மில்லை. ஆனால், தடுக்கி விழுந்த சூழ்நிலையைப் பேதுரு கையாண்ட விதத்திற்கும், யூதாஸ் கையாண்ட விதத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு. அந்த வேறுபாடு ஒருவனை நித்திய வாழ்வுக்கும், இன்னொருவனை நித்திய அழிவுக்கும் அழைத்துச் சென்றுவிட்டது.

பக்தி வாழ்க்கையில் எதிர் வரும் தடுமாற்றச் சூழ்நிலை களை நாம் எப்படிக் கையாளுகிறோம் என்பது மிகவும் முக்கி யம். சொல்லப் போனால், தான் தடுக்கித் தலை குப்புற விழுந்த பிறகு யூதாஸ் மனமாற்றத்திற்கான வழியை நாடவே இல்லை என்று சொல்ல முடியாது. எப்படியெனில், காட்டிக் கொடுப்ப தற்குத் தான் கூலியாகப் பெற்றுக்கொண்ட முப்பது வெள்ளிக் காசைத் திரும்பக் கொண்டு வந்தான் (மத். 27:3). அத்தோடு நிற்காமல், குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்ததினால் நான் பாவம் செய்தேன் (மத். 27:4) என்று வாய்விட்டுச் சொன் னான். தன் தவறை உணர்ந்து துக்கப்பட்டான். இந்தச் சமயத்தில் ஜீவனும், மரணமும் அவனுக்கு முன்பாக இருந்தது. ஆனால், அவன் சரியானதைத் தெரிந்தெடுக்கவில்லை. வெள்ளிக் காசை தேவாலயத்தில் எறிந்து விட்டு நான்று கொண்டு செத்தான் (மத். 27:5). ஏனெனில், அவன் துக்கம் தேவனுக்கேற்ற துக்கமாக இருக்கவில்லை. (2 கொரி. 7:10). எப்படியெனில், இவன் இயேசு மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டுள்ளான் (மத். 27:3). ஆனால், இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக இவன் மனஸ்தாபப்படவில்லை. ஒருவேளை, இயேசு மரணாக்கினைக்கு உட்படுத்தப்படாமல் இருந்திருந்தால், இவன் செயல் இவனுக்குத் தவறாகத் தெரிந்திருக்காதோ?.

ஆனால், பேதுரு தனது தடுமாற்றச் சூழ்நிலையைக் கையாண்ட விதம் முற்றிலும் வித்தியாசமானது. பேதுரு இயேசு ஆண்டவரை மறுதலித்தது ஒரு வியாழன் மாலைப் பொழுது. அந்த இரவே, இயேசுவின் பார்வை பட்டபோது அவன் மனங் கசந்து அழுதுள்ளான். யூதாசைப் போல் தன் துரோகச் செயலுக் கான குற்ற உணர்வைத் தீர்ப்பு வெளியாகும் வரை சுமந்து கொண்டு அலையவில்லை. அதுமாத்திரமல்ல, யூதாஸ் தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்குப் பிறகு, சீடர் கூட்டத்தை நாடி வரவேயில்லை. ஆனால், பேதுருவோ இயேசுவை மறுதலித்து மனங்கசந்து அழுததற்குப் பிறகு, உடனடியாகச் சீடர் பட்டாளத்தை தேடி வந்து அவர்களோடு தன்னை இணைத்துக் கொண்டான். எப்படியெனில், உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றிய செய்தியை மகதலேனா மரியாள், யோவன்னாள் போன்ற வர்கள் பதினொருவருக்கும் அறிவிக்கத் தேடி வந்துள்ளார்கள். யூதாஸ் ஏற்கனவே செத்து விட்டான். இந்த நிலையில் 11 பேர் என்று சொல்லும் போது பேதுருவும் உள்ளடக்கமே.

அங்கே, அந்த ஸ்திரீகளின் செய்தி மற்ற சீடர்களுக்கு வீண் பேச்சாகத் தோன்றின போது, பேதுரு மாத்திரம் நம்பி, கல்லறை யினிடத்திற்கு ஓடியுள்ளான் (லூக். 24:11,12). அதுமாத்திரமல்ல, எப்பொழுதும் போல பேதுரு தன்னை கர்த்தருடைய ஊழியத்தில் முன்னிறுத்தியும் கொண்டான். இவனுடைய மாறிய இருதயத் தைக் கண்ட தேவன் மீண்டுமாக பேதுருவுக்கு அந்த வாய்ப்பைத் தந்தார். சபை ஸ்தாபிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் செய்யப்பட்ட மகாபிரசங்கம் மறுதலித்த பேதுருவைக் கொண்டு தான் செய்யப்பட்டது. என்ன மனமாற்றம் பாருங்கள்!.

அருமையானவர்களே, இங்கே பேதுருவின் மனமாற்றத்திற் கான காரணங்கள் என்ன என்று ஏதாவது விளங்குகிறதா? யூதா சாலே முடியாதது பேதுருவால் எப்படி முடிந்தது? குறைந்தது இரண்டு காரணங்களை நாம் கவனிப்போம்.

## I இயேசுவின் வார்த்தைகளை நினைத்து அழுதான்.

இயேசுவை மூன்று முறை மறுதலித்த தடுமாற்றப் பேதுரு தலைநிமிர்ந்து நிற்பதற்கு முதல் காரணமாக, அவன் இயேசுவின் வார்த்தைகளை நினைத்து அழுததைக் கூறலாம்.

இயேசு ஆண்டவருடைய வார்த்தைகளின் மேன்மையை யும், முக்கியத்துவத்தையும் உலகமும், கிறிஸ்தவமும் அறியாத ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். இங்கே நான், கிறிஸ்தவமும், கிறிஸ்துவின் வார்த்தைகளின் மேன்மையை அறிய வேண்டிய அளவுக்கு அறியாமல் இருக்கிறது என்று அர்த்தத்தோடு தான் சொல்கிறேன். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக (யோவான் 20:30,31) இயேசுவால் நடப்பிக் கப்பட்ட அற்புதங்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம், இயேசு வால் போதிக்கப்பட்ட வார்த்தைகளுக்குக் கிறிஸ்தவர்களால் இன்று தரப்படுவதில்லை. ஆனால், இயேசுவைப் பினபற்றுகிறவர்கள்

அவருடைய வார்த்தைகளுக்கு உச்சபட்ச முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காக இயேசு ஆண்டவரே வெளிப் படுத்தியுள்ள வசனத்தைக் கவனியுங்கள். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). வசனம் தான் கடைசி நாளில் நியாயந்தீர்க்கிறதாக இருக்கும்போது, அந்த வசனத்திற்கு இரண்டாமிடமும், மூன்றாமிடமும் கொடுப்பது எவ்வகையில் நியாயமாகும்?.

யூதாஸ் மனந்திரும்பாமல் அழிந்து போனதற்குக் காரணம், இயேசு சொன்ன வார்த்தைகளை அவன் நினைக்காமற் போனதே. மாறாக, பேதுரு மனந்திரும்பி, மீண்டும் பரிமளித்த தற்குக் காரணம் இயேசு சொன்ன வார்த்தைகளை நினைத்தது தான். இயேசுவின் வார்த்தைகளை நினைக்க வேண்டிய நேரத்தில் நினைக்காமல் இருப்பதும், நினைக்க வேண்டிய தருணத்தில் நினைப்பதும் எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை எண்ணிப் பாருங்கள். தேவனுடைய வார்த்தைகளின் வல்லமை பற்றி எபிரெயர் ஆசிரியர், "தேவனுடைய வார்த்தை யானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" என்கிறார் (எபி. 4;12). தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையை உணர்ந்திருந்தபடியால்தான் தாவீது நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் (சங். 119:11) என்று கூறுகிறார்.

அப்படியானால், அருமையானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டுள்ள, சுயாதீனப் பிரமாணமாகிய புதிய பிரமாணத்திற்கு, அதாவது கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு நாம் எப்படிப்பட்ட மரியாதையும், முக்கியத்துவமும் கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோம்? மறுபடியும் சொல்லுகிறேன், பேதுரு மனந்திரும்பினதற்குக் காரணம் அவன் இயேசுவின் அற்புதங்களை நினைத்தல்ல. மாறாக, அவருடைய வார்த்தைகளை நினைத்ததுதான். இன்றைக்கு நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்கும், இரட்சிப்படைவதற்கும், கர்த்தரால் அவருடைய ஒரே சபையில் சேர்க்கப்படுவதற்கும் பக்தி வாழ்க்கையில் பரிசுத்தமாய் வாழ்வதற்கும், மறுமையில் பரலோகத்தைச் சுதந்தரிப்பதற்கும் இயேசுவின் புதிய ஏற்பாட்டு வார்த்தைகள் தான் தேவை. ஆகவே தான், பவுலடியார், மிலேத்து பட்டணத்தில் எபேசு பட்டணத்துச் சபையின் மூப்பர்களோடு பேசும்போது, இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப் பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்கு சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் என்றார். (அப். 20:32).

ஆகையால், கிறிஸ்துவைப் பின்பற்றும் நம்முடைய பக்தி வாழ்க்கையில், கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் வாழும் நம்மைக் கட்டுப்படுத்தாத பழைய ஏற்பாட்டுக் காரியங்களுக்கும், (ரோமர் 15:4) பாரம்பரியங்களுக்கும் (மத். 15:6) ஒரு நோக்கத்தோடு கொடுக்கப்பட்டு, முடிந்துபோன (1கொரி. 13:8,9) அற்புத அடையாளங்கள், தீர்க்கதரிசனங்கள், அந்நிய பாஷைகள் போன்றவற்றிற்கும் நாம் முக்கியத்துவம் தராமல், இறுதி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும் வல்லமையுள்ள கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வசனங்களை நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நினைக்கிறவர்களாயிருந்து, அவைகளுக்கு நம்மைச் சமூலமாக ஒப்புக் கொடுப்போமாக. அப்படிச் செய்வோமானால், பேதுருவை மறுபடியும் ஏற்று, அவனைத் தம் சேவைக்காகப் பயன்படுத்தின பிதாவும், இயேசுவும் நம்மையும் அவர் காரியமாகப் பயன்படுத்துவர்.

## II அதுவும் உடனே நினைத்து அழுதான்

இயேசுவை மூன்று முறை மறுதலித்த தடுமாற்றப் பேதுரு, தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணமாக, அவன் இயேசுவின் வார்த்தைகளை உடனே நினைத்து அழுததைக் கூறலாம்.

தேவனுக்குப் பிரியமாக வாழ விரும்பும் ஒருவன் தன் பக்தி வாழ்க்கையில் செய்யும் தலையாய காரியம், தேவனுடைய வார்த்தைகளை உடனடியாக நினைத்துச் செயல்படுவது தான். இப்படிச் செயல்பட்டவர்கள் தேவ அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். உடனடியாகச் செயல்படாமல் காலம் தாழ்த்தினவர்கள் யூதாஸ் போல ஆவியிலும், சரீரத்திலும் அழிந்து தான் போயிருக்கிறார்கள்.

ஆதியாகமத்தில், யோசேப்பு என்னும் சீர்மிகு இளைஞனை நாம் பார்க்க முடியும். ஒரு சமயம் அவன் எஜமானின் மனைவி அவனோடு தவறாக நடக்க அழைத்த போது, அவள் சொல்லுக்கு இணங்காமல்..... "தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வது எப்படி" என்றான் (ஆதி. 39:7-9) சவாலான, சபலமான அந்த நேரத்தில் அவனுக்கு முன்பாக இரண்டு தரப்பு வார்த்தைகள் நின்றது. ஒன்று, எஜமான் மனைவியின் ஆசை வார்த்தைகள். இரண்டு, தேவனுடைய எச்சரிப்பு வார்த்தைகள். அப்பொழுது' இந்த இளைஞன் தேவனுடைய வார்த்தைகளை உடனே நினைத்தான். ஆகவே தான், தேவனுக்கு விசேஷமாகப் பாவம் செய்வது எப்படி என்று சொல்ல முடிந்தது. ஆம், தேவனுடைய வார்த்தை களை நாம் உடனே நினைப்பது நம்மை அழிவிலிருந்து காப்பாற்றும்.

உடனே செயல்பட்டவர்களுக்கு உதாரணமாக, புதிய ஏற்பாட்டில் நாம் அப்போஸ்தலன் பவுலடியாரைக் குறிப்பிடலாம். ஆம், அவர் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்த, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கிப் பிரயாணமாய் போனபோது இயேசுவாலே சந்திக்கப்பட்டான். (அப். 9:1-6). இப்படி அவன் சந்திக்கப்பட்ட நிகழ்வு குறித்துப் பின்னாளில் கலாத்தியருக்கு எழுதும் போது இப்படியாகக் குறிப்பிடுகிறார். "தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை

எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை..." (கலா. 1:16,17) என்கிறார். அதாவது, இயேசுவின் வார்த்தைகளுக்கு நான் உடனே கீழ்ப்படிந்தேன் என்று கூறுகிறார். பேதுருவைப் போன்று பவுலடியாரும் ஊழியத்தின் பாதையில் வல்லமையாகப் பயன்பட்டதற்கான இரகசியம் இதுதான்.

மாறாக, உடனடியாகச் செயல்படாமல் ஆன்ம வாழ்க்கையில் அழிந்து போனதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஆளுநர் பேலிக்ஸ். பவுலடியார், ஒரு சமயம் விசாரணைக் கைதியாக இவனுக்கு முன்பாக நின்று, நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானது உன்னை அழைப்பிப்பேன் என்றான் (அப். 24:25). ஆத்தும ஈடேற்றத்துக்காக உடனடியாகச் செயல்படும் வாய்ப்புக் கிடைத்தும் அதைத் தள்ளிப்போட்டான். ஆனால், மறுபடியும் அவனுக்கு வாய்ப்புக் கிடைத்ததாக வேத வசனங்களில் இல்லை. இன்னும், இதே பவுல், அத்தேனே பட்டணத்து அறிவு ஜீவிகளுக்கு, மார்ஸ் மேடையில் நின்று, மனந்திரும்புதல், நியாயத்தீர்ப்பு, மரித்தோரின் உயிர்த்தெழுதல் போன்றவை பற்றிப் பேசிய பொழுது, சிலர்; நீ சொல்லுகிறதை "இன்னொருவேளை" கேட்போம் என்றார்கள் (அப். 17:30-33). அந்தச் சிலருக்கு இன்னொருவேளை அவர்கள் வாழ்க்கையில் வந்ததாகவும் வேத வசனங்களில் இல்லை.

அப்படியானால், அருமையான வாசகர்களே பரத்துக்கான நம்முடைய பக்தி வாழ்க்கையின் செயல்பாடு எத்தன்மை கொண்டதாக உள்ளது? இயேசு வாக்களித்துக் கட்டின ஒரே சபை பற்றி (மத். 16:18) நமக்குப் பிரசங்கிக்கப்படும்போதும், சபை சரித்திர நூலாகிய அப்போஸ்தலர் நடபடிகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இரட்சிப்பின் திட்டம் (அப். 4:12) பற்றி நமக்கு எடுத்துக் காட்டப்படும்போதும், நம்முடைய செயல்பாடு எப்படிப்பட்டதாக உள்ளது? நம்மை இறுதி நாளில் நியாயம் தீர்க்கும் அதிகாரம் கொண்ட கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளுக்கு நாம் உடனடியாகக் கீழ்ப்படிந்து நடக்கப் போகிறோமா அல்லது காலத்தைத் தள்ளிப்போட்டு நம்முடைய ஆன்மாவை நரகத்திற்குக் கொண்டு செல்லப்போகிறோமா? சொல்லுங்கள்.

ஒருவேளை, நம் பக்தி வாழ்க்கையில் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களாக இருந்தால், பேதுருவைப் போல் அவருடைய வார்த்தைகளை நினைத்து, மனங்கசந்து அழுது, செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். அதற்காக என்ன விலை கொடுக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். தேவன் இதை நம் ஒவ்வொருவரிடத்திலும் எதிர்பார்க்கிறார்.

ஆகையால், நாம் யாரும் யூதாஸ் போல அழிந்து போய் விடாமல் பேதுரு போல் காப்பாற்றப்படவும், பயன்படுத்தப்படவும், உயர்த்தப்படவும் நம்மை ஒப்புக் கொடுப்போமாக! ஆமென்!

# ஏன் நாங்கள் ஞானஸ்நானம் பெறுகிறோம்?

J.C. சோட்

**ஞா**னஸ்நானம் ஒரு வேதாகம பாடம். எனவே, நாம் வேதாகமத்திற்குச் சென்று திருமுழுக்கு என்னவென் பதையும், அதன் நோக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் கண்டு பிடிக்க வேண்டும்.

வேத வசனங்களுக்கு நாம் போகும்போது, தன் ஊழிய நாட்களில் ஞானஸ்நானம் கொடுத்த யோவான் என்னும் ஒரு மனிதர் பற்றி வாசிக்கிறோம். இவர் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபடியால் யோவான் ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டி ருக்கிறார். மத்தேயு 3:1-6 வசனங்களில் நாம் இப்படியாக வாசிக்கி றோம். ***"அந்நாட்களில் யோவான் ஸ்நானகன் யூதேயா வின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதை களைச் செவ்வை பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடு கிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கத்தரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. இந்த யோவான் ஒட்டக மயிர் உடையைத் தரித்து தன் அரையில் வார்க்கச்சயைக் கட்டிக் கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும், காட்டுத் தேனும் அவனுடைய ஆகாரமாயிருந்தது. அப்பொழுது எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தாரும், யோர்தானுக்கு அடுத்த சுற்று புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங் களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ் நானம் பெற்றார்கள்"***.

மறுபடியும் நாம் யோவான் 3:23-ல் இப்படியாக வாசிக்கி றோம். " சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான்; ஜனங்கள் அவனிடத் தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்" யோவானின் ஊழியத்தை நாம் தொடர்ந்து பார்க்கும்போது, அவர் இயேசுவுக்கே ஞானஸ் நானம் கொடுத்ததாக வாசிக்கிறோம். "அப்பொழுது, யோவா னால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவரிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக; இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயி ருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங் கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறின வுடனே இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது;

தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது " (மத்தேயு. 3:13-17).

இப்போது, யோவானின் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் என்ன? யோவான் கிறிஸ்துவுக்கு முன்னோடி. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி அனுப்பப்பட்டவர். இவருக்கு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த மக்களிடத்தில் ஞானஸ்நானத்தை அறிமுகப்படுத்தும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது; இவர் இப்படிச் செய்ததால் கிறிஸ்துவுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் ஞானஸ்நானம் பற்றிப் போதிக்க எளிதாக அமைந்தது. யோவானின் ஞானஸ்நானம் இயேசுவின் நாமத்தில் செய்யப்படவில்லை அல்லது கொடுக்கப்படவில்லை. எனவே, அதற்கு பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தம் இல்லை. எனவே தான், பவுல் எபேசு பட்டணத்துக்கு வந்து அங்கே யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த மக்களிடம், பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள், பின்பு, கிறிஸ்து அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பது சம்மந்தமான சத்தியத்தைப் போதித்த பிறகு அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 19:1-5). அதன் பொருள், யோவானின் ஞானஸ்நானம் கிறிஸ்துவின் மரணம் வரை நீடித்தது என்பதே. அதன் பின்பு, கிறிஸ்து போதித்த ஞானஸ்நானம் நடைமுறைக்கு வந்தது.

கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் தான் பரமப் பிதாவிடம் திரும்பிச் செல்வதற்கு முன்பாக இயேசு அப்போஸ்தலர்களைப் பார்த்து, "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று சொன்னார் (மாற்கு 16:15,16). மத்தேயு ஆசிரியர் இப்படிச் சொல்கிறார். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் " என்றார். (மத்தேயு 28:19,20). மேற் சொல்லப்பட்ட வசனங்கள் தான் "பிரதான கட்டளை" என்றழைக்கப்படுகிறது. இந்தக் கட்டளை கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்கின்ற நற்செய்தியாகிய சுவிசேஷத்தை உலகெங்கும் எடுத்துச் செல்வதைக் குறிக்கிறது. அதில் பிரசங்கிக்க வேண்டிய சில குறிப்பிட்ட நிபந்தனைகளும்

இருந்தன. குறிப்பாக, கிறிஸ்துவில் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் போன்ற நிபந்தனைகள் இருந்தன. இதுபோன்ற கட்டளைகளுக்கு ஒருவர் கீழ்ப்படிவதன் மூலமாகத்தான் இரட்சிக்கப்பட முடியும். கிறிஸ்து சொன்னதைக் கவனியுங்கள். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16).

ஞானஸ்நானம் இரட்சிப்பின் நிபந்தனைகளுள் ஒன்றாக இருக்கிறது. 1பேதுரு 3:21 ல் "*ஞானஸ்நானம் இரட்சிக்கிறது*" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இந்த வசனமோ அல்லது வேதாகமத்தில் வேறு எந்த வசனமோ ஞானஸ்நானம் மாத்திரம் இரட்சிக்கிறது என்று போதிக்கவில்லை. ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகச் செய்ய வேண்டிய கடைசி நிபந்தனையாக ஞானஸ்நானம் இருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முழுவதையும் நாம் வாசிக்கும் போது ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதை நாம் கவனிக்க முடியும். ஒவ்வொரு மனமாற்ற சம்பவத்திலும் ஜனங்கள் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கக் கேட்டிருக்கிறார்கள், அதை விசுவாசித்திருக்கிறார்கள், ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். பல மனமாற்றச் சம்பவங்களில் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டது நேரடியாகவும், மறைமுகமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், விசுவாசம் உண்டாக தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று போதிக்கின்ற தேவனுடைய வார்த்தைகள் இருக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் போது, பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் திரளான ஜனங்களுக்குப் பிரசங்கித்தார்கள். அதைக் கேட்ட பிறகே அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் 16:30-ல் சிறைச் சாலைக்காரன் பவுலையும், சீலாவையும் பார்த்து, ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். அதற்கு பவுலும், சீலாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி என்று சொன்னார்கள். ஆனால், இந்த மனிதன் விசுவாசிப்பதற்கு அவனுக்கு கிறிஸ்துவைப் பற்றி எதுவும் தெரியாது. இங்கே, இந்த மனிதனுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் பிரசங்கமே தீர்வாயிருந்தது. அது முடிந்த பிறகு, அவர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அடுத்ததாக, அப்போஸ்தலர் 2:38-ல் அந்த ஜனங்கள் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய விரும்பினார்கள். அவர்கள் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்த

ஆவியின் வரத்தைப் பெறுவார்கள் என அவர்களுக்கு சொல்லப் பட்டது (அப்போஸ்தலர் 2:38). அவர்கள் ஏற்கனவே சுவிசேஷம் பிரசங்கிக்கக் கேட்டு அதை விசுவாசித்திருக்கிறார்கள் (அப்போஸ் தலர் 2:37), ஆனால், வேறு எதையாவது செய்ய வேண்டுமா என அறிய விரும்பினார்கள். இப்போது அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என அவர்களுக்குச் சொல்லப் பட்டது.

அடுத்ததாக, அப்போஸ்தலர் 8:29-39 வசனங்களில், எத்தி யோப்பியாவிலிருந்து வந்த மந்திரியின் மனமாற்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது. பிலிப்பு கிறிஸ்துவை அவருக்கு எப்படி பிரசங்கித் தார் என வேத வசனம் சொல்கிறது. அவர்கள் தண்ணீ ரண்டை வந்தபோது, அந்த எத்தியோப்பிய மந்திரி ஞானஸ் நானத்தின் மூலம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பினான். பிலிப்பு மந்திரியிடம் முழுமனதோடு விசுவாசித்தால் அப்படிச் செய்ய முடியும் என்று விளக்கினார். அதற்கு மந்திரி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று பதிலளித் தான் (அப்போஸ்தலர் 8:37). பின்பு பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். கடைசியாக, அப்போஸ் தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள எல்லா மனமாற்றச் சம்பவங்களிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பி யவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்று காண முடியும். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று ஜனங்களுக்கு சொல்லப்பட்டதை நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில், கொர்நேலியும் அவன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலர் 9 மற்றும் 22-வது அதிகாரங்களில், சவுல் எப்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார் என்று வேத வசனம் நமக்குச் சொல் கிறது. அங்கே அவன் எழுந்து, பாவங்கள் போகக் கழுவப்பட ஞானஸ்நானம் பெறும்படி சொல்லப் பட்டது. அப்போஸ்தலர் 16 ஆம் அதிகாரத்தில் சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் இராத்திரியிலே அந்நேரத்திலே தானே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

ஞானஸ்நானம் ஓர் அடக்கம் என்று நமக்கு போதிக்கப் பட்டிருக்கிறது. பவுல் இப்படிச் சொன்னார். “ ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாக வும், இருக்கிறீர்கள் ” (கொலோசெயர் 2:12) ரோமர் 6:3,4 வசனங் களையும் வாசியுங்கள். அங்கே, ஞானஸ்நானம் தண்ணீரில்

அடக்கம் பண்ணப்படுதல் என்று வேத வசனம் சொல்கிறது. பிலிப்பு அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த போது, தண்ணீருக்குள் அழைத்துச் சென்று, தண்ணீரிலிருந்து வெளியே அழைத்து வந்தார் (அப்போஸ்தலர் 8:29-39). ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் வரச் செய்கிறது (ரோமர் 6:3,4; கலாத்தியர் 3:26,27). ஞானஸ்நானம் ஒருவரை சபைக்குள்ளாக்குகிறது (I கொரிந்தியர் 12:13). யோவான் 3:3-5 வசனங்களில், ஒருவர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். இங்கே தண்ணீர் என்பது ஞானஸ்நானத்தையும், தேவனுடைய ராஜ்யம் என்பது கர்த்தருடைய சபையையும் குறிக்கிறது. அச்சமயத்தில் ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை, எனவே, ஒருவர் அதில் பிரவேசிக்கக் கூடாதிருந்தது, ஆனால், கிறிஸ்து விரைவில் வரப்போகிற ஒன்றைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். இன்று நிச்சயமாகவே ஒருவர் சபையில் பிரவேசிக்க ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும். இதன் பொருள், ஒருவன் இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்க்கப்பட ஆவியின் வார்த்தைகளைக் கொண்ட வேதாகமத்திலுள்ள சுவிசேஷத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

வேதாகம போதனையின்படி ஞானஸ்நானம் பெற்றுவிட்டீர்களா? இல்லையென்றால் நீங்கள் இந்த காரியங்களைத் தொடர்ந்து படித்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிய துரிதமாக முடிவு எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## வேத வாசிப்பினால் பயன் அடைய சில வழிகள்

1. வேதத்தின் காரியங்களை அதில் உள்ளபடியாக ஏற்றுக் கொள்ளுங்கள்.
2. திறந்த மனதோடு வேதாகமத்தை வாசியுங்கள்.
3. சத்தியத்தை அறிந்து கொள்ளும் ஆர்வத்தோடும், கவனத்தோடும் வாசியுங்கள்.
4. விளங்காதவைகளைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள்.
5. வாசிக்கும்போது முக்கியமானவைகளை அடிக்கோடிட்டுப் பழகுங்கள்.
6. வேதம் வாசிப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
7. குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி வாசியுங்கள்.

# முதிர்வயதுள்ள ஸ்திரீ

**ரேச்சல் இராஜநாயகம்**

இந்த பூமியிலே நாம் என்றும் நிலையாக வாழும் படியாக தேவன் நம்மைப் படைக்கவில்லை. வாழ்க்கையின் கடைசி நாட்களை எட்டியவுடன் (அதாவது வயதானவுடன்) உலகம் ஒருவரை வயதானவர் என்று அழைக்கிறது. வியப்பு என்னவெனில் முடிந்தளவு நீண்ட நாட்கள் வாழவே நாம் ஆசைப்படுகிறோம். முதிர்வயதைக் கண்டு பயப்படுகிறோம். சொல்லப்போனால் இப்படி எண்ணுவது தேவையில்லை முதிர்வயதென்பது ஆசீர்வாதமானது. சரீரம் தேய்ந்து போவதே முதிர் வயதாகாது. மாறாக, திடமான மனநிலையை பெறுவதே முதிர் வயது. 40 வயதை எட்டியவுடன் ஐயோ எனக்கு வயதாகி விட்டது என்று சொல்லிக் கொண்டு, மனதை அடைத்துக் கொண்டு எதையும் சகித்துக் கொண்டு, எந்த ஒரு புதிய காரியங்களையும் பார்க்காமல், யார் மேலும் அன்பு செலுத்தாமல், புதிய எண்ணங்களை உருவாக்காமல் தங்களையே குறுக்கி குறைத்துக் கொள்கிறார்கள். அதே சமயம் எழுபது, எண்பது வயதுகளிலும் மிகவும் சுறுசுறுப்பாக, மனதை இளமையாக வைத்திருப்பவர்களையும் நாம் பார்க்க முடியும். திறந்த மனதுடன், எந்த காரியத்தையும் கற்றுக் கொண்டு, வாழ்க்கை பாதையில் எது வந்தாலும் அதை வரவேற்கப் பழகும் அந்த அழகான பாங்கைத் தான் அவர்கள் வாழ்க்கை பிரதிபலிக்கிறது. ஆக, நம் மனதும், எண்ணமும் சுறு,சுறுப்புடன், நிரம்பி இருக்கும் போது நாம் வயதானவர்கள்போல் இருக்க வேண்டிய அவசியமில்லை.

### வயது என்பது நம் குணங்களை பெரிது படுத்திக் காட்டும்

ஒருமுறை ஒரு இளம் பெண் இப்படியாக கூறினாள், எனக்கு வயதாகும்போது நான் சந்தோஷமாயிருப்பேன்; ஏனென்றால், அப்போது நல்லவளாகவும், அன்புள்ளவளாகவும், இனிமையானவளாகவும் இருப்பது அவ்வளவு கடினமாயிருக்காது என்று. எவ்வளவு தவறாக புரிந்து கொண்டிருக்கிறாள் பாருங்கள். வயதானதினாலேயே ஒருவருடைய குணங்கள் மாறிவிடமுடியாது. இளம் வயதில் எந்த குணத்தை பெற்றிருக்கிறோமோ அது கொஞ்சம் அதிகமாக வெளியே தெரியும். வாலிபத்திலே களிமண் போல் இளகி இருக்கும் குணம் காலப் போக்கில் கடினமாகிறது. அந்த வடிவம் மாறுவதில்லை. எவ்வளவு காலம் வாழ்கிறோமோ அந்த அளவு அது உறுதியாகிறது. முப்பது வயதில் ஒருவர் பொறுமையில்லாமல், எதிலும் அதிருப்தி, மனக் கடினம் இவற்றோடு இருப்பாரானால், அவர்

எழுபது வயதாகும் அன்றும் அதிக பொறுமையற்றவராக, அதிருப்தியுள்ளவராக, மனதை மிகவும் கடினப்படுத்துகிறவராகத்தான் இருப்பார். எப்படி வயது ஆக, ஆக உடலிலுள்ள இரத்த குழாய்கள் கடினமாகிறதோ அதேபோல் குணாதிசயங்களும் கெட்டியாகி சந்தோஷமற்றவர்களாகவோ அல்லது பயங்கரமான இறுதி காலத்தை சந்திக்கிறவர்களாகவோ மாற்றுகிறது. வயதுக்கென்று, அழகாக, அன்பான முகத்துடனும், வெள்ளை முடியுடனும் பார்க்கும்போது, அவர்கள் அந்த ரூபத்தை தங்கள் இளமை காலத்திலேயே பெற்று அதை வளர்த்துக் கொண்டவர்கள் என்று திட்டமாக சொல்ல முடியும். நாமும் சாந்தமும், இனிமையான முதியோராக இருக்க வேண்டுமானால் இந்த இனிய இளமையிலேயே அதை தூக்கி விட வேண்டும். எனவேதான் ஒவ்வொரு நாளும் தேவனால் கொடுக்கப்பட்டுள்ள நீதியான முறையை பின்பற்றி வாழக் கற்றுக்கொள் வேண்டும். அவருடைய வசனமெல்லாம் நீதியுள்ளவைகள்.

### II பூமியிலே வாழும் எல்லோரும் முதுமையை சந்தித்துத்தான் ஆக வேண்டும்.

பிறப்பு, இறப்பு போன்று, முதுமையும் நிச்சயமான ஒன்றுதான். தேவன் ஒருவரை இந்த பூமியிலே வாழ அனுமதிக்கும் பொழுது காலம் அவனை முதுமைக்குள் அழைத்துச் செல்லுகிறது. இது இயற்கையான வாழ்க்கை முறை, இதை நாம் பயமில்லாமல் எதிர்கொள்ள வேண்டுமானால் தேவன் கொடுத்த சட்டத்தின் படி வாழ வேண்டும். அதை விடுத்து, முதுமையடையாமல், இளமையாகவே இருக்க என்னென்ன செயற்கையான வழி முறைகள் . இருக்கிறதோ அவற்றையெல்லாம் செய்து, பணத்தை செலவழிக்க வேண்டிய அவசியமில்லை. நீதியின் வழியில் உண்டாகும் நரை மயிரைப் பெற்றுக்கொள்ள (நீதி. 16:31) ஸ்திரீகளாகிய நாம் நோக்கமாயிருக்க வேண்டும். அவள் உடை, நடை அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவும் அவளை கண்ணியமான, தேவன் எதிர்பார்க்கும் ஒரு நபராக குறித்துக் காட்டும். சரீரத்தை பாதுகாத்து அப்படியே வைத்துக் கொள்ள நாம் எதையும் செய்ய முடியாது. தேவன் கொடுத்திருக்கும் விலை மதிக்க முடியாத நேரத்தை, நம்மால் செய்ய முடியாத ஒன்றுக்காக செலவிடுவது மனுஷர் பார்வையிலும், தேவன் பார்வையிலும் மதியீனமானது.

### III புறம்பான மனுஷன் சாகிறான், உள்ளான மனுஷன் புதிப்பிக்கப்படுகிறான்.

பிறந்த நாள் முதல், சரீரமானது அழிவுக்குத்தான் கொஞ்சம், கொஞ்சமாக சென்று கொண்டுள்ளது. கடைசியில் மண்ணுக்குச் செல்கிறான். மனிதன் பாவம் செய்து வீழ்ந்தபோது தேவன் கொடுத்த தண்டனை இது. பிரசங்கி 12-ல் மிகவும் நேர்த்தியாக அரசன் சாலமோன் இதுபற்றி கூறுவார். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமக்கு இது அப்படியே தலைகீழ் அர்த்தம் கொடுக்கிறது. ஆனபடியினாலே, நாங்கள்

சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது. (2கொரி. 4:16). ஆவிக்குரிய வாழ்க்கைக்கு வீழ்ச்சியே இல்லை. தேவனையும், இயேசுவையும் நோக்கிப் பார்த்து விசுவாசம் வைப்போமானால் உள்ளான மனுஷன் மிகவும் உறுதியுடன் இருக்கும். சரீரம் இளைப்படைந்தாலும், நம்முடைய ஆவி கழுகளைப் போல செட்டைகளை விரித்து உயர பறக்கக் கூடியதாக இருக்கும்.

**IV முதியவர்களுக்கென்று தேவன் விசேஷித்த இடத்தை வைத்துள்ளார்.**

தீத்து. 2:3-5 வசனப் பகுதியில் பரிசுத்த ஆவியானவர் முதியவர்களுக்கான பொறுப்புகளை அப்.பவுல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பாலிய ஸ்திரீகளுக்கு புத்தி சொல்லக்கூடிய திறமையை முதிய ஸ்திரீகளுக்கு கொடுத்துள்ளார். மதிப்பும், அன்பும், திறமையும் ஒருங்கே தங்களிடையே பெற்றிருந்த போதிலும் பாலிய ஸ்திரீகளையோ, குழந்தைகளையோ கையாளும் போது தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. இயல்பான தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமொழிய எப்போதும் அதிகாரம், கட்டளை இவைகளுடன் இருக்கக்கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் எவ்வளவு சௌகரியத்துடன் வாழ்ந்தாலும் தேவனுக்கு சேவை செய்ய வேண்டும் அதாவது, தேவன் சம்பந்தப்பட்ட காரியத்தில் ஈடுபட வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

ஆக, கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, வாழ்க்கையில் குணாதிசயங்கள் எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள். வயதாகும்போது நல்ல பண்புகளைப் பெற்றுக் கொள்ளலாம், வேதம் வாசிக்கலாம், ஜெபத்துக்கு நேரம் ஒதுக்கலாம், சபையில் வேலை செய்யலாம் என்றெல்லாம் நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது.

தேவன் அனுமதிக்கும் ஒவ்வொரு நாளையும் நாம் பாக்கியமாக கருதி வாயப்பைப் பயன்படுத்திக் கொள்வோம். தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்வோம். நாமும் பரலோகம் சொல்வோம். நம்மை சார்ந்தவர்களையும் பரலோகத்துக்கு செல்ல உதவி செய்வோம். ஆமென்!

**ஆகமங்களின் முக்கிய காலங்கள்**

1. **ஆதாம்** சுமார் கி.மு. 4000 வருடம்
2. **ஜலப்பிரளயம்** சுமார் கி.மு. 2400 வருடம்
3. **ஆபிரகாம்** சுமார் கி.மு. 2000 வருடம்
4. **யாக்கோபு** சுமார் கி.மு. 1900 வருடம்
5. **யோசேப்பு** சுமார் கி.மு. 1800 வருடம்
6. **மோசே** சுமார் கி.மு. 1400 வருடம்
7. **எகிப்திலிருந்து** புறப்படுதல் சுமார் கி.மு. 1400 வருடம்

வாலிபர் பகுதி

# கணக்குக் கொடுக்க வேண்டும்

## பென்னிமார்ட்டீன்

**வா**லிப உள்ளங்களே! உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த வகையில் நம் தேவன் நம்மை இந்தப் பூமியில் வைத்திருப்பதன் நோக்கம் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் (ஏசாயா 43:7) இவ்வுலகில் நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் நிச்சயமாக வே நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்குக் கொடுக்க வேண்டும். இந்த நியாயத்தீர்ப்பின் நாள் இந்த உலகில் தேவனுக்குப் பிரிய மானவைகளைச் செய்பவர்களுக்கு ஆசீர்வாதமான நாளாகவும், தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்பவர்களுக்கு பயங்கரமான நாளாகவும் காணப்படும். இப்போது அந்த நியாய தீர்ப்பின் நாளை எப்படி மகிழ்ச்சியின் நாளாக மாற்றுவது என்பது பற்றி சில காரியங்களை வேத வசனத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

இன்றைய நாட்களில் வாலிபர்கள் வரலாறு காணாத வருமானங்களை ஈட்டி வருகிறார்கள். கை நிறைய காசு இருந் தால் தான் கவலையில்லாமல் வாழ முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆவியின் கனியைத் தர வேண்டிய வாலிபர்கள் பிசாசுக்கு இடங்கொடுத்து வாழ்க்கையில் இடறிவிழுகிறார்கள். பிசாசுக்கு நம்முடைய எண்ணங்கள் எல்லாம் தெரியாது. நம்முடைய எண்ணங்களை அறியக்கூடியவர், இருதயங்களை ஆராயக்கூடியவர் தேவன் ஒருவரே, ஆனால் தந்திரமான பிசாசு வாலிபர்கள் எந்த பகுதியில் நாட்டமுடையவர்களாய் இருக்கி றார்களோ அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புகளை அள்ளிக் கொடுப்பான். ஆனால் ஓர் ஆவிக்குரிய வாலிபன் பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறான், அப்பொழுது பிசாசு ஓடிப்போவான் (யாக்கோபு 4:7).

நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது இவ்வுலகில் நாம் செய்யும் செயல்களுக்காக நியாயத் தீர்ப்பு நாளிலே தேவனுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உண்மையைவிட தெளி வாக எந்த ஒரு உண்மையும் போதிக்கப்படவில்லை (2 கொரிந் தியர் 5:10). ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக் காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல் லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். ஆனால், இன்று அநேகர் வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்த்தால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இல்லை, நாம் யாருக்கும்

பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்கிற ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல் தெரிகிறது பிரசங்கி 11:9-ல் சாலொமோன் ஞானி சொல்லும் போது வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாகட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றின் நிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி எனக் கூறுகிறார். இவ்வுலகில் எத்தனையோ நிகழ்வுகள் இருந்தாலும் நியாயத்தீர்ப்பு நாளைப் போல பயங்கரமான நாள் ஒன்றுமில்லை. அந்த நாளை மனதில் கொண்டவர்களாய் நாம் இந்த உலகத்தில் வாழும் போது தீமையை விட்டு விலகி கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்வோம். அப்போது நாம் அந்த நாளைக் குறித்து பயப் படாமல் சந்தோஷமான அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். நாம் வாழும் இந்த உலகமானது நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்பது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது. இப்போது வேதாகமத்தி லிருந்து நாம் எதையாவது செய்யத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும் என்று வேத வசனங்களின் துணை கொண்டு பார்ப்போம்.

## I. தேவனுடைய வசனங்களை அறியாதிருந்தால்

ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்றுக்கொள்ளத் தவறினால் நியாயத் தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம் பதில் என்னவாயிருக் கும்?. வேதாகமம் மனிதனுக்கு தேவனுடைய வெளிப்பாடாகும். வேதாகமம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்து கிறது (எபேசியர் 3:1-3). நீங்கள் தேவனுடைய சத்தியத்தை அறியாமலேயே மரித்து நித்தியமாக இரட்சிக்கப்பட முடியாது. சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலை யாக்கும் என்று இயேசு சொன்னார் (யோவான் 8:32). அந்தக் கடைசி மகாபெரிய நாளில் தேவனுடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). நம்முடைய நாட்களில் வேத வசனங்கள் பத்திரிக்கை, தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் மூலமாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனவே நாங்கள் வேதவசனங்களை கேட்டதே இல்லை என்று யாரும் சாக்குப்போக்கு சொல்ல முடியாது. அப்படியே வேத வசனங் களைக் கேட்டிராவிட்டாலும், தேவனு டைய சிருஷ்டிப்புகளைப் பார்த்து இவைகளையெல்லாம் வடிவமைத்தவர், உருவாக் கியவர் ஒருவர் இருக்கிறார் என்று அவர்கள் முடிவுக்கு வர வேண்டும். அவர்களுக்கும் போக்குச் சொல்ல இடமில்லை.

நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருக்க வேத வசனங்களைப் படிக்க வேண்டும் (2 தீமோத்தேயு 2:15). அதைப்போல் நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்பட்டால், தவறாக நடத்தப்பட்டால், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நாம் பதில் என்னவாயிருக்கும்? நாம் கள்ளப்போதகர்களால் வஞ்சிக்கப்படுவதைக் குறித்து இயேசு எச்சரித்தார் (மத்தேயு 7:15-20). மேலும் இயேசு குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்று எச்சரித்தார் (மத்தேயு 15:14).

அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய வாசகர்களுக்கு எழுதும்போது, பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (1 யோவான் 4:1).

## II கிறிஸ்துவுக்குள் இல்லாதிருந்தால்

சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வாய்ப்புக்கு மேல் வாய்ப்பிருந்தும் அதைத்தள்ளி கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் போது நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? (ரோமர் 2:8,9) (எபிரெயர் 2:1-3). கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பது மிக முக்கியம். ஒரு மனிதன் பெரிய வீட்டுக்குள் இருப்பது, அதிக ஆஸ்திகளுடன் இருப்பது, பெரிய அலுவலகத்தில் இருப்பது எல்லாம் இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும் உதவாது. ஆனால் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதுதான் மிக முக்கியம். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் தான் கிறிஸ்துவும் அவனுக்குள் இருப்பார். அதுமாத்திரமல்ல கிறிஸ்துவுக்குள் தான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருக்கின்றன (எபேசியர் 1:3).

சரி, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவுக்குள் எப்படி இருப்பது பற்றி புதிய ஏற்பாட்டில் மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 6:3,4). வசனங்களை வாசியுங்கள் கிறிஸ்து இயேசுவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நான் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

மேற்கூறப்பட்ட வசனத்தில் நாம் பார்த்தபடி ஒருவன் ஞானஸ்நானத்தினாலே தான் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும்.

புதிய ஏற்பாட்டில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதற்கும், இரட்சிப்படைவதற்கும், இதைத் தவிர வேறு வழிகள் வெளிப் படுத்தப்படவில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றிருந்தால் உலகத்தில் சண்டைகளோ, சச்சரவுகளோ இருக்காது. இந்த உலகம் ஒரு வித்தியாசமான உலகமாக இருக்கும். நாம் 2 கொரிந்தியர் 5:17ல் வாசிக்கும்போது "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ் டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின " என்று வாசிக்கிறோம். பிரியமான வாலிப உள்ளங் களே, இதுவரை நாம் இந்த உலகப்பிரகாரமான காரியங்களில் நம்மை மூழ்கடித்திருந்தாலும் பரவாயில்லை, இனிமேல் நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து ஒரு புதிய ஏற்பாட்டு மனிதனாக வாழ்ந்து, அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங்களைப் போல் பிரகாசிப்போம். தேவன் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமென்!

## நாளும் நடப்பும்

1. சமச்சீர் கல்வி சச்சரவு உச்சநீதிமன்ற தீர்ப்பால் தொடர்கிறது. பெற்றோர்கள், மாணவர்கள் தவிப்பு.
2. நீலகிரி மலை இரயிலின் இயக்கம் கேள்விக்குரியாகியுள்ளது.
3. அண்ணா பல்கலைக்கழகங்கள் மீண்டும் ஒன்றாக்கப்படும் என்று தமிழக அரசு அறிவிப்பு.
4. கறுப்புப் பணம், ஊழல் ஆகிய இரண்டும் நடுவண் அரசுக்குப் பெரும் தலைவலியாக மாறி உள்ளது.
5. மழைக்கால கூட்டத் தொடரில் லோக்பால் மசோதா அரசு உறுதி.
6. அடுத்த 5-10 ஆண்டுகளுக்கு கிரிக்கெட்டில் இந்தியா ஆதிக்கம் செலுத்தும் - பயிற்சியாளர் டங்கன் பிளெட்சர்.
7. பிருத்தி-2 சோதனை வெற்றி.

சிறுவர் பகுதி

# ஆயக்காரனிடமிருந்து...

ABEL R. NAYAGAM

கிறிஸ்து இயேசுவால் அதிகம் நேசிக்கப்படும் சிறு பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். கோடை விடுமுறைகள் முடிந்து பள்ளிகளுக்குச் செல்ல ஆரம்பித்து விட்டீர்களா? விடுமுறை முடிந்து விட்டது என்ற வருத்தமும், புது கல்வியாண்டு துவங்கிவிட்டது என்ற மகிழ்ச்சியும் கலந்த ஓர் உணர்வோடு இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இந்த கல்வியாண்டை வெற்றிகரமாக முடிக்க என் மனமார்ந்த வாழ்த்துதல்களைத் தெரிவிக்கிறேன்.

குழந்தைகளே! தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் எந்த ஒரு காரியத்தை செய்வதானாலும் முதலில் தேவனிடம் அதை ஒப்படைத்து அவரின் வழிகாட்டுதலின் மூலம் செய்வது நல்லது. ஆம்! ஜெபம் பற்றி தான் பேச வருகிறேன். ஜெபத்தின் மூலமாக நாம் நம் காரியங்களை தெரியப்படுத்துவோமானால், தேவன் நமக்காக செயல்படுவார் என்ற தைரியம் நமக்கு கிடைக்கும். ஒரு புதிய கல்வியாண்டின் துவக்கத்திலிருக்கும் நீங்கள், இந்த கல்வியாண்டு முழுவதையும் தேவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன். நீதி. 16:3 உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவி என்று கூறுகிறது. சரி, நாம் பாடத்திற்கு வருவோம். ஜெபம் பற்றிப் பேசும் பொழுது, தேவன் எப்படிப்பட்ட ஜெபத்தை அங்கீகாரம் செய்கிறார் என்று நாம் கற்றுக்கொண்டால், அவருக்கு பிரியமான முறையில் ஜெபம் செய்து அவரின் ஆசீர்வாதங்களை பெற அது உதவி செய்யும். சரிதானே? அப்படி நமக்கு கற்றுத் தரும் ஒரு சம்பவம் பற்றித் தான் நாம் இந்த மாதம் பார்க்க இருக்கிறோம்.

உங்கள் வேதாகமங்களைத் திறந்து லூக்கா 18: 10-14 வசனங்களை வாசியுங்கள். வாசித்து விட்டீர்களா? சரி நாம் இங்கே இரண்டு மனிதர்கள் பற்றிப் பார்க்கிறோம். ஒருவன் பரிசேயன்; மற்றொருவன் ஆயக்காரன். இரண்டு பேரும் தேவாலயத்துக்கு ஜெபம் செய்ய வந்திருந்தார்கள். இருவரும் ஜெபித்தார்கள். ஆனால், அங்கீகாரம் இருவருக்கும் கிடைக்கவில்லை. மாறாக, ஆயக்காரனுடைய ஜெபத்திற்கு மட்டும் கிடைத்தது. இது எப்படி நியாயம்? இருவரும் ஜெபம்தானே செய்தார்கள்? என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால், குழந்தைகளே இரண்டு மனிதருமே ஜெபம் செய்திருந்தாலும், தேவன் பிரியப்படும்படியான ஜெபத்தை ஆயக்காரன் மட்டுமே செய்தான். அப்படி என்னதான்

வித்தியாசமாக செய்தான்? இந்த கேள்வி யின் பதில் தான் நாம் கற்றுக் கொள்ளப்போகிற பாடம்.

**I தற்பெருமையில்லாதவனாக ஜெபித்தான்.**

பரிசேயன் லூக். 18:11 -12-ல் நாம் வாசிக்கும் பொழுது, தன்னைப் பற்றின பெருமையான காரியங்களை சொல்லி தேவனிடத்தில் ஜெபம் செய்தான். தான் செய்கிற நல்ல காரியங்களையும், மற்ற மனுஷருக்கு முன்பாக யோக்கியமானவன் என்பதையும் ஜெபத்திலே சொல்லி தேவனுடைய அங்கீகாரத்தை பெற நினைத்தான். அவனிடத்திலிருந்தது பெருமை. பெருமை உள்ளவர்களைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது? வாசியுங்கள் 1பேது. 5:5 “பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்”. ஆனால், ஆயக்காரன் ஜெபம் செய்யும்போது, பெருமை இல்லாமல், தாழ்மையோடு ஜெபித்தான். அதே 1பேதுரு 5:5 தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார் என்று கூறுகிறது. ஆகவே, நாம் ஜெபம் செய்யும் போது, பரிசேயனைப்போல பெருமையோடு ஜெபம் செய்யாமல் ஆயக்காரனைப் போல தாழ்மையோடு ஜெபம் செய்ய வேண்டும் (யாக். 4:10).

**II பாவங்களை உணர்ந்தவனாக ஜெபித்தான்**

இன்னொரு முறை லூக். 18:10-14 வரை வாசியுங்கள். நம்மெல்லாருக்கும் தெரியும். பாவம் செய்யாமல் எந்த ஒரு மனிதனும் இருக்க முடியாது என்று. நன்மை, தீமை அறிந்த எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தோம். பரிசேயனும் அப்படித்தான். ஆனால், இவன் பாவமில்லதவனைப் போல, நான் பாவிகளாகிய மற்றவர்கள் போல் இல்லை என்று ஜெபித்திருக்கிறான். தானும் ஒரு பாவி என்பதை அவன் உணரவில்லை. ஆனால், ஆயக்காரனோ, “தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்” என்று ஜெபித்தான். அவன் ஒரு பாவி என்பதை உணர்ந்து ஜெபித்தான்.

நீதி. 28:13 தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பொறுவான் என்று சொல்லுகிறது.

ஆயக்காரன் நமக்கு இரண்டு அருமையான பாடங்களை கற்றுக் கொடுக்கிறார். நாம் ஜெபிக்கும்போது பெருமையில்லாதவர்களாய் தாழ்மையோடு இருக்க வேண்டும் என்றும், நாம் பாவம் செய்கிறவர்களாயிருக்கிறோம் என்பதை உணர்ந்து அவைகளை அறிக்கை செய்கிறவர்களாக ஜெபிக்க வேண்டும் என்றும் நாம் கற்றிருக்கிறோம்.

எனவே, நாம் ஜெபிக்கும் போது பரிசேயனைப் போல் இல்லாமல், ஆயக்காரனைப் போல் ஜெபிப்போமானால் தேவனிடமிருந்து அங்கீகாரம் பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை. தேவன் நம்மோடு இருப்பாராக!

**மனன வசனம் : பிரச. 28:13**

# " துருவின் சாட்சி " நூலில் இருந்து

## பாடம் - 8 துருவின் சாட்சி

### உறுதி எடுத்துக் கொடுப்பதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?

**(சென்ற மாதத் தொடர்ச்சி)**

**II தீர்மானித்துக் கொள்வது ஒழுங்காகவும், விகிதாச்சார அடிப்படையிலும் கொடுக்க உதவி செய்கிறது.**

கர்த்தருக்குக் கொடுத்தல் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்காக இருக்கிறது. தேவன் நம்மிடத்தில் அதிகமாக அன்பு கூர்ந்தபடியால் தம்முடைய குமாரனையே கொடுத்தார் (யோவான் 3:16). "தேவனுடைய ஈவு மனிதனை வெட்கமடையச் செய்கிறது". நாம் கர்த்தருடைய வேலைல்ய நம்முடைய சுவாசத்தை விட அதிகமாக நேசிப்பதால், கர்த்தருக்காகச் சிறந்ததைக் கொடுப்பதும் நம்மிடத்தில் இயற்கையாகவே அமைந்து விட வேண்டும். நாம் கிறிஸ்துவையும், அவருடைய சபையையும் மிகவும் நேசிப்பதால், சபையின் எல்லாத் தேவைகளுக்கும் நாம் உற்சாகமாகக் கொடுக் கிறவர்களாயிருக்கும்படி, சபையின் மூப்பர்களுக்கு நாம் முறையாகவும், உறுதி எடுத்தும் கர்த்தருக்கு கொடுப்பதாக அறிவிக்கிறோம். ஒரு மனிதன், தான் இப்படியாக கொடுப்பேன் என்று தீர்மானித்தால் தான் அவனுக்கு கொடுக்கப் போகிற காணிக்கையை குறித்து சிந்தை இயற்கையாக வரும். ஒரு சபை விசுவாசி விடுமுறைக்கு போகும் போது, தான் கொடுப்பதாகச் சொன்ன தொகையை கொடுத்துச் செல்லவில்லையென்றாலும் அல்லது திரும்பி வந்த பின் அதைக் கொடுக்கவில்லை என்றாலும் அவர் அந்த தீர்மான அட்டையில் கையெழுத்திடவில்லை என்று தான் பொருள்படும். சபையில் ஜாக்கிரதையுள்ள மக்களும், உதாரத்துவமாய்க் கொடுப்பவர்களும் தாங்கள் தீர்மான அட்டையில் கையெழுத்திடுவது அனைவருக்கும் தெரிந்திருக்கிறபடியால், கர்த்தருடைய சபையின் வேலையைத் திட்டமிட உதவுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

இப்போது, உண்மையிலேயே ஏன் ஒருவர் இதை ஆட்சேபிக்கிறார்? அவர் அதிகமாக கொடுப்பது யாருக்கும் தெரிய வேண்டாம் என்பதற்காகவா? அல்லது உதாரத்துவமாய்க் கொடுப்பதாலா? அல்லது அவர் கர்த்தருடைய வேலையில் அதிக விருப்பமுள்ளவராயிருக்கிறபடியால் தீர்மான அட்டையில் கையெழுத்திடாமலிருக்கிறாரா? சகோதரரே, நாம் நம்முடைய புத்தி தெளிந்து, கர்த்தருடைய வேலையில் ஆர்வம் கொண்டு நம்முடைய பணத்தால் அதை தாங்க முன்வருவோமாக, ஒரு சராசரி அங்கத்தினர் தீர்மான அட்டையில் கையெழுத்திடாமல் இருப்பதற்கு காரணம், அவர் குறைவாக கொடுப்பது

தான் என்பது உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும். தேவன் அவருக்கு அபரிதமாக கொடுப்பதில் அவர் குறைவாகக் கொடுப்பதால் வெட்கமடைந்து, அந்த தீர்மான அட்டையில் கையழுத்திட மறுக்கிறார். (இக்கருத்துக்கு விதிவிலக்கு என்று யாராவது இருக்கலாம். ஆனால், அவர்கள் குறித்து இதுவரை நான் கேள்விப்படவோ, சந்திக்கவோ இல்லை) தவறாமல் தொடர்ந்து, உறுதியாய்க் கொடுப்பவர்கள் தீர்மான அட்டையில் கையெழுத்திடுபவர்கள் தான். அஜாக்கிரதையானவர்களும், குறிக்கோளற்றவர்களும், கற்பிக்கப்படாதவர்களுமாகிய இவர்கள் தான் தீர்மான அட்டையில் கையெழுத்திடுவதில் நம்பிக்கை இல்லாதவர்கள்.

## III ஒருவர் கொடுக்க தீர்மானித்துக் கொள்ள வேண்டும்

தீர்மானிக்காமல் கொடுப்பது என்பது முடியாத காரியம். "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்க கடவன்; உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்". (II கொரிந்தியர் 9:7). ஒருவர் பத்து பைசா கொடுக்க மறுத்தால் கூட அவர் தன் மனதில் கொடுக்க வேண்டாம் என தீர்மானித்தாலொழிய அப்படி நடைபெறாது. அதை நீங்கள் "தீர்மானம்", "உறுதிமொழி" அல்லது "வாக்கு" என எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அது நாம் கொடுப்பது சம்மந்தமாக செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். சபையின் மூப்பர்கள், கர்த்தருடைய வேலையைச் சரியாகத் திட்டமிட முடியாதபடி, தீர்மானித்துக் கொடுப்பதை ஆட்சேபிப்பவர் அல்லது தான் எவ்வளவு கொடுக்கப் போகிறேன் என்று தெரியக் கூடாது என நினைப்பவர் பற்றி இப்படியாகச் சொல்லி விடலாம். கர்த்தா அவரை ஆசீர்வதித்ததற்குத் தக்கதாகக் கொடுக்காதபடியால், தன்னுடைய பெலவீனம் மற்றவர்களுக்குத் தெரியாதபடி இதை ஒரு "தப்பிக்கும் வழியாக" பயன்படுத்துகிறார். நாம் நம்முடைய பணத்தைக் கொடுக்கவில்லையென்றால் அல்லது உதாரத்துவமாய்க் கொடுக்க எண்ணமே இல்லையென்றால் அல்லது அந்த பணத்தை எடுத்து நம்முடைய சுயநல மான இச்சைகளை பூர்த்தி செய்யப் பயன்படுத்தினால் நாமும் தீர்மான அட்டை யில் கையழுத்திட மறுத்து, தீர்மான அட்டையில் கையெழுத்திடுவது வேத வசனங்களுக்கு புறம்பானது என்று வாதிடுவோம். ஒரு மனிதன் ஒரு வாகனத்தை வாங்கும் போது அதற்கான கட்டணத் தொகையை செலுத்துவதாக ஒரு சிறிய தாளில் கையழுத்திடுகின்றனர். நாம் ஒரு வங்கியில் "ஒரு லட்சம் ரூபாய் கடன் பெறுகிறோம்". என்று வைத்துக் கொள்வோம். அப்போது, அந்த வங்கி அதிகாரி, நம்மை பார்த்து, "நாங்கள் பணத்தைக் கடனாக தருகிறோம்" என்று சொல்லி, ஒரு சிறிய தாளை நம்மிடத்தில் நீட்டி இதில் கையெழுத்திடுங்கள் என்று சொல்லுகிறார். அப்போது, "என்ன, அநியாயம் இது", "கடனைத் திருப்பிச் செலுத்துகிறேன் என்று கையெழுத்திடச் சொல்லுகிறார்" என்று எல்லோருக்கும் முன்பாகச் சொல்வோமா? அல்லது

சத்தமிட்டு, காலைத் தரையில் உதைத்து, மேஜையை ஓங்கித் தட்டி, வாக்குக் கொடுப்பதிலோ, தீர்மானிப்பதிலோ, எனக்கு நம்பிக்கை இல்லை, நான் கிறிஸ்துவின் சபை அங்கத்தினன்; ஆகையால், நான் இதை எதிர்க்கிறேன் என்று சொன்னால், அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?.

ஒரு மனிதர் தான் விரும்புகின்ற வாகனத்தையோ, மீன்பிடி படகையோ, நிலம், வீடு போன்ற பூமிக்குரியவைகளையோ வாங்கும்போது, அதற்கான பணத்தை திரும்பச் செலுத்துவதாக வாக்குக் கொடுத்து, தீர்மானம் எடுத்து, உறுதி அளிக்கிறபோது, கர்த்தருடைய வேலைக்கென்று கொடுப்ப தற்கு மட்டும் பத்து பைசா கொடுக்கக் கூட நான் உறுதி அளிக்கமாட்டேன் என்று சொல்வாரானால் அவருடைய இருதயம் தேவனோட சரியாக இல்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

கர்த்தருடைய வேலை சம்மந்தமாக தீர்மானம் எடுப்பதில், உறுதி அளிப்பதில், வாக்கு கொடுப்பதில் நம்பிக்கை இல்லாத மனிதன், வேதத்தை நன்றாகப் படிக்க வேண்டும். அநேகர் தீர்மானம் எடுப்பது தேவனுடைய வேலையை திட்டமிட்டு, ஆசையுடன் அதை நிறைவேற்றுவதற்காக என்பதை மறந்து விடுகிறார்கள் போல் தெரிகிறது.

கர்த்தருடைய வேலைக்கென்று முறையாக நிதியை திரட்டாத பிராந்திய சபையானது தேவனுடைய பார்வையில் கவிழ்ந்து போவதற்கான விளிம்பில் உள்ளது. ஒருவர் இப்படி யாகச் சொன்னார். நான் தானாகவே முன் வந்து கொடுக்கிற காணிக்கையில் நம்பிக்கை வைக்கிறேன் என்று. நல்லது தான் ஆனால், அவை உறுதி எடுத்துக் கொடுக்கப்பட வேண்டும். 1 கொரிந்தியர் 9:5ல், ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தான தர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்துகிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது என்று பார்க்கிறோம். (1 கொரி. 9:1-5 வாசிக்கவும்).

நம்முடைய காணிக்கையானது உறுதியான திட்டத்தை வெளிப்படுத்துகிறதாக இருக்க வேண்டும். அதாவது, நிர்ணயித்ததை செயலில் காட்ட வேண்டும். நம்முடைய காணிக்கையானது நன்கு திட்டமிடப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். செயல்படுத்தப்படாத திட்டம் மதிப்பற்றதாயிருக்கும். அதுபோலவே, திட்டமிடாத கொடுத்தலும் அரைகுறையானதாகவே இருக்கும். மேலும், தீர்மானிக்கப்பட்ட திட்டமானது, சகோதரர்கள் மத்தியில் பக்தி வைராக்கியத்தை உண்டாக்குவதாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட தீர்மானமும், திட்டமிடுதலும் இந்த வைராக்கியத்தை செயலில் கொண்டு வரத்தூண்டுகிறதாய் இருக்க வேண்டும். இவ்வகையான கொடுத்தலானது எப்போதும் உதாரத்துவமாய்க் கொடுக்கிறதில் நம்மைக் கொண்டு போய் சேர்க்கும். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் வரவுக்குத்தக்கதாக திட்டமிட்டு, தீர்மானித்து கர்த்தருக்கு காணிக்கை கொடுத்தால்,

குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவித்து விடலாம்.

சகோதரர்களே, நாம் நின்று, யோசித்து, கொடுத்தலைப் பற்றி தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை கவனிப்போம். தேவனுடைய ஜனங்களுக்கு பிரசங்கியார்களும், போதகர்களுமாயிருக்கிறவர்கள், சபையில் உள்ள லோபத்தனமான, சுய நலமுள்ள, பொருளாசையுள்ள சபை அங்கத்தினர்கள் காணிக்கைக் கொடுப்பதை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பிரசங்கிக்க வேண்டும். சபையார் நம்மை பயமுறுத்த நாம் அனுமதிக்கக் கூடாது. வேதாகமம் கொடுத்தலைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதை பார்க்காமல் தன் கண்களை மூடிக் கொள்ளும் ஒருவர், தான் ஏற்கனவே தன்னுடைய மனதில் தீர்மானித்து விட்டபடியால் தனக்கு இந்த பாடத்தைக் குறித்து யாரும் போதிக்க முடியாது என நினைக்கும் ஒருவர் நிச்சயமாகவே தன்னுடைய ஆத்துமாவை இழந்து போவார். அவருக்கு மிக துன்மார்க்கர்களுக்கான கதியே அல்லாமல் வேறொரு சிறந்த வாய்ப்பு அமையாது. இந்த உண்மையை சபையார் மிக விரைவில் தெரிந்து கொள்வது நல்லது. ஏதாவது பிரசங்கியார் கஞ்சத்தனமான விசுவாசி சத்தியத்தை பிரசங்கிக்க அச்சுறுத்த அனுமதி கொடுத் தால் அந்த பிரசங்கியாரும் நரகத்தில் அந்த கஞ்சத்தனமான சபை விசுவாசியுடன் தன்னை இணைத்துக் கொள்வார். காணிக்கை பிரசங்கத்தை விரும்பாத அந்த அங்கத்தினர், இந்த பிரசங்கியார் தீயிலிடப்படுவதற்குக் காரணமாகிவிடுகிறார். ஒருவர் இப்படியாகச் சொன்னார், உங்களால் முடிந்தவரை பெற்றுக்கொண்டு, உங்களால் முடிந்தவரை சேமித்துக் கொண்டு, உங்களால் முடிந்தவரை கொடுக்கவில்லையென்றால், நீங்கள் இதற்கு முன்பு இருந்ததை விட இப்போது இரண்டு மடங்கு நரகத்தின் பிள்ளைகளாயிருக்கிறீர்கள் என்று.

## IV தீர்மானிப்பதற்கு, வாக்கு கொடுப்பதற்கு, உறுதி அளிப்பதற்கு ஆட்சேபணைகள்

இந்த பாடத்தைக் குறித்து தேவன் சொல்லியிருக்கிறவைகளுக்கு எதிராக நீங்கள் ஆட்சேபணை தெரிவிக்கும் போது, நீங்கள் மற்றவர்களிடம் ஞானஸ்நானம், சபை, கர்த்தருடைய பந்தி, அல்லது தேவன் சொல்லியிருக்கிற வேறு ஏதாவது பாடம் பற்றி படிக்கும் போது அவர்களும் நொண்டிச் சாக்குகளால் ஆட்சேபணை தெரிவிப்பார்களென்பதை மறந்து விடாதீர்கள். ஆகையால், தேவனுடைய வார்த்தையை நாம் மறுதலிக்காமல் அப்படியே விசுவாசிப்போம்.

ஒருவர் இப்படியாகச் சொன்னார். கொடுக்கிறவர்கள் கிணறுகளைப் போன்றவர்கள். சில கிணற்றிலிருந்து தண்ணீரை இறைக்க வேண்டும். சில கிணறுகளிலிருந்து குழாய் மூலமாக தண்ணீர் வெளியேற்றப்பட வேண்டும். சில கிணறுகள் தண்ணீரால் நிரம்பி வழியும். நீங்கள் இதில் எவ்வகையைச் சார்ந்தவர்கள்?

(தொடர் கட்டுரை)

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

K. பாஸ்கர்

## பாடம் - 8. ஆராதனை

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். இன்று உலகத்திலே பலவிதமான ஆராதனை கடவுள்ளுக்கு செய்து வருகின்றனர். ஆனால், பிதாவாகிய தேவன் ஒருவர் உண்டு. அவரே சகலத்தையும் படைத்தார். (1கொரி. 8:6)நாம் பிதாவாகிய தேவனை ஆராதிப்பதற்காகவே படைக்கப்பட்டிருக் கிறோம். இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர் களிடத்திலும் பலவிதமான ஆராதனை காணப்படுகிறது. பிரியமானவர்களே பிதாவாகிய ஒரே தேவனுக்கு பல ஆராதனை களா? வசன ரீதியான ஆராதனையைத் தான் தேவன் ஏற்றுக் கொள்வார். அப்படிப்பட்ட ஆராதனையை அறிந்து கொள்வதின் மூலமாக வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அடையாளம் கண்டு கொள்ள முடியும். அதற்கு இந்தப் பாடம் பேருதவியாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

### I ஆராதனை என்றால் என்ன?

ஆராதனை என்றால் வேதாகமத்தின்படி துதித்தல், மகிமைப்படுத்துதல், தொழுதுகொள்ளுதல், சேவித்தல், மற்றும் ஊழியம் செய்தல் என்று பொருள்படும். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே பட்டணத்திலிருந்த தேவனுடைய பிள் ளைகளுக்கு எழுதும்போது, ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத் திற்கு மனந்திரும்புங்கள் என்று குறிப்பிடுகின்றார். அதாவது, அவர்கள் விக்கிரக ஆராதனையிலிருந்து மனந்திரும்பி மெய் யான தேவனுக்கு ஆராதனை செய்து வருகிறதை ஊழியம் என்று குறிப்பிடுகின்றார் (1தெச. 1:9) ஆராதனை என்பது தேவனுக்கு ஊழியம் செய்வதாக இருக்கின்றது. பவுல் தனது ஊழியத்தைக் குறித்து எபேசு சபையின் மூப்பர்களிடத்தில் கூறும் பொழுது வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதரு டைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனை களோடும் நான் கர்த்தரை சேவித்தேன் என்று கூறுகின்றார் (அப். 20:19). பவுல் தனது ஊழியத்தில் நேரிட்ட துன்பங்களோடே

கர்த்தரை ஆராதித்தாகக் கூறுகின்றார். ஆராதனையும் ஊழியமும் பிரிக்க முடியாததாய் உள்ளது. ஊழியப் பயணத்தில் ஆராதனையும் காணப்படுகிறது.

இன்று சிலர் ஊழியம் செய்கின்றார்கள். ஆனால், தேவனை ஆராதிப்பதில்லை ஆராதனையை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. ஆனால், வேத வசனம் கூறுகின்றது வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொலோ. 3:17). (ரோம 12:1) ஆராதனை செய்யும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் அவருடைய ஊழியத்தில் பங்கு வகிக்கின்றார்கள். ஆராதனை என்பதற்கான ஆங்கில வார்த்தைகள் Worship என்றும், Service என்றும் அழைக்கப்படுகிறது. இதன் பொருள் தகுதியான ஒருவருக்கு செலுத்தப்படும் மரியாதையைக் குறிக்கிறது. அந்தத் தகுதி ஒரே ஒருவருக்கு தான் இருக்கின்றது. அவர்தான் பரலோகத்திலிருக்கிற மெய்யான தேவன். அவர் சிருஷ்டிகர் (ஆதி. 1:1) அவர் பயபக்திக்குரியவர் (சங். 111:9) அவர் வல்லமையுள்ள, மகிமையுள்ளவர் (1 நாளா 29:11) அவர் மனிதக் கண்களினால் காணக்கூடாதவராயிருக்கிறார் (கொலோ 1:15) அவர் ஆவிக்குரிய நபராக உள்ளார் (யோவா 4:23,24).

தேவன் ஆவிக்குரிய நபராக இருக்கின்றபடியால் அவரை உருவங்கள் மூலமாக ஆராதிக்க முயற்சி செய்யக் கூடாது. இஸ்ரவேலருக்குக் கர்த்தர் சொல்லும்போது கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளிலே நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால், நீங்கள் உங்களைக் கெடுத்துக் கொண்டு யாதொரு உருவத்திற்கு ஒப்பாக விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு ... (உபா 4:15-18) என்று எச்சரித்தார். உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்று நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் (யோவா 4:23,24) ஆராதனை என்பது தேவனுக்கு ஏறெடுக்கும் துதி, மகிமையைக் குறிக்கிறது.

## II பொய்யான ஆராதனையின் வகைகள்

மின்னுவதெல்லாம் பொன்னல்ல! உலகத்தில் ஏறெடுக்கும் எல்லா ஆராதனைகளும், ஆராதனையாகாது உண்மையான ஆராதனைக்கும் பொய்யான ஆராதனைக்கும் உள்ள வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். பொய்யான ஆராதனையின் வகைகள் நான்கு இருப்பதாக புதிய ஏற்பாடு போதிக்கிறது. அவைகளைத் தெரிந்துகொண்டு, உண்மையான ஆராதனைக்கும், பொய்யான ஆராதனைக்குமுள்ள வித்தியாசங்களை அறிந்து கொள்ளலாம்.

பொய்யான ஆராதனையின் வகைகளில் முதலாவது விக்கிரக ஆராதனை : விக்கிரகம் என்பதில் கிரேக்க வார்த்தை ஐடலோன். இதன் பொருள் கற்பனையான ஒரு பொருளின் உருவத்தை மனிதன் தன்

கைவேலையால் ஒரு உருவத்தை செய்து அதை தெய்வம் என்று வழி படுவதாகும். புதிய ஏற்பாட்டில் புறஜாதியாரின் கஷ்டங்களாக இந்த விக்கிரகங்கள் இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட விக்கிரகங்கள் மனுஷருடைய கைவேலையுமாக இருக்கிறது. அவைகளுக்கு எல்லா அவயங்களும் மனிதனால் கொடுக்கப்பட்டும் அவைகள் ஒன்றும் செய்யாது. நன்மையும், தீமையும் செய்ய இயலாத வைகளாக இருக்கிறது (சங்கீதம் 115:4-7) தேவன் இருக்கும் இடத்தில் விக்கிரகத்தை வைக்கக்கூடாது. அது ஆவிக்குரிய விபச்சார மாயிருக்கிறது (வெளி. 2:20). ஆகவே, விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது (1 கொரி. 10:14). தேவன் இந்த விக்கிரக ஆராதனையை வெறுக்கின்றார். நாமும் வெறுத்து ஓட வேண்டும்.

இரண்டாவதாக : வீணான ஆராதனை : இயேசுவானவர் ஊழியம் செய்த பாலஸ்தீன பகுதியில் முதல் நூற்றாண்டிலே விக்கிரக ஆராதனை இல்லை. ஆனால், ஜனங்கள் மத்தியில் பாரம்பரியம் நிறைந்து காணப்பட்டது. யூதர்களின் மதத் தலைவர்களான பரிசேயர், வேதபாரகர் போன்றவர்கள் வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனுஷருடைய பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அதையே போதித்து வந்தனர். இயேசு கிறிஸ்து அவர் களைப் பார்த்து மாயக்காரரே, உங்களைக் குறித்து இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிற ார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான் என்றார். (மத். 15:7-9) மேலும், உங்கள் பாரம்பரியத்தினால் தேவனு டைய கட்டளையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? என்றார் (மத். 15:3) இன்னும் சில கிறிஸ்தவர்கள் வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனிதனுடைய பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறதை நாம் காணலாம். பாரம்பரியமாகக் கடை பிடித்து வரும் எல்லா ஆராதனைகளும், பண்டிகைகளும் வீணான ஆராதனையாக உள்ளது

மூன்றாவதாக, சுய இஷ்டமான ஆராதனை : தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்ய வேண்டும். தேவனுக்கு செய்யும் ஆராதனையில் தேவனுடைய விருப்பம் இருக்க வேண்டும். ஆனால், சுய இஷ்டமான ஆராதனையில், தாங்கள் எப்படி ஆராதனை செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதன்படி செய்வது வேத வசனத்திற்கு முதலிடம் கொடுக்காமல் தன்னுடைய விருப்பத்திற்கு முதலிடம் கொடுப்பது. கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்த லனாகிய பவுல் தேவ தூதருக்குச் செய்யும் ஆராதனையை சுய இஷ்ட ஆராதனை என்று எழுதுகின்றார் (கொலோ 2:21,22).

அப்போஸ்தலனாகிய யோவான் தேவ தூதனைக் கண்டு வணங்கும் படி அவன் பாதத்தில் விழுந்தான். அதற்கு தேவ தூதன் நீ இப்படி

செய்யாதபடிக்கு பார்! உன்னோடும் உன் சகோதரரோடும், தீர்க்க தரிசிகளோடும் இந்த புஸ்தகத்தின் வசனங்களைக் கைக் கொள்ளுகிறவர்களோடும் நானும் ஒரு ஊழியக்காரன் தேவனைத் தொழுது கொள் என்றான் (வெளி. 22:8,9) இந்த சுய இஷ்ட ஆராதனையைத் தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்று எச்சரிக்கப்படுகின்றோம்.

நான்காவதாக அறியாமையின் ஆராதனை : அப்போஸ்த லனாகிய பவுல் அத்தேன பட்டணத்திற்குச் சென்றார். சீலா, தீமோத்தேயுக்காக காத்துக் கொண்டிருக்கையில் அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருந்ததைக் கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தை வெளியில் எதிர் பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினார். பின்பு பவுல் மார்ஸ் என்னும் மேடைக்கு அழைக்கப்பட்டார். அந்த மேடையில் பவுல், அத்தேனரே, எந்த விசயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படி யென்றால் நான் சுற்றித்திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவை களைக் கவனித்துப்பார்த்தபொழுது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கும் ஒரு பலி பீடத்தைக் கண்டேன் நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக் கிறேன் என்று கூறி ஜீவனுள்ள தேவனைக் குறித்தும் அவருடைய சிருஷ்டிப்பைக் குறித்தும் கூறினார். மேலும், அவர்களின் அறியாமையை அதாவது, விக்கிரக ஆராதனையும் கண்டித்துக் கூறினார். அவர்கள் மெய்யான தேவனை அறியாமல் எல்லா கடவுளும் ஒன்று தான் என்று எண்ணியிருந்தனர். அவர்கள் அறியாமையிலிருந்து மனந்திரும்ப வேண்டும் என்று கூறினர் (அப். 17:21-31) அருமையானவர்களே, அவர்களுடைய அறியாமை எல்லா கடவுளும் ஒன்றுதான் என்று வாழ்ந்தனர். இன்னும் சிலர் அப்படிப்பட்ட எண்ணமுடையவர்களாக வாழ்கின்றனர். மேலும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ப வர்கள் எல்லா சபைகளும் ஒன்றுதான் பெயர்கள் தான் வித்தியாச மாக இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு ஆராதனை செய்கின்ற னர். இவைகள் யாவுமே அறியாமையின் ஆராதனையாக உள்ளது. இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார்.

### III உண்மையான ஆராதனையின் அடையாளங்கள்

உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். என்று ஒரு அடையாளத்தை இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். (யோ. 4:23) உண்மையான ஆராதனையின் அடையாளத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் ஆவியோடும் என்ற அடையாளம், உண்மையோடும் என்ற அடையாளம் உண்மையான ஆராதனையை வெளிப்படுத்துகிறது. ஆவியோடும் என்றால் சரியான இருதய நிலையோடும் ஆராதிக்க வேண்டும் என்றும் பொருள்படும். (மத். 15:8)


உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ண வேண்டும். (எபே. 5:19) உண்மையோடும் என்பது சத்தியத்தோடும் என்று அர்த்தமாகிறது. உண்மை என்பதற்கு சத்தியம் என்று பொருள். உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் என்று இயேசு கிறிஸ்து கூறினார். (யோவ 17:17) இயேசு கிறிஸ்து போதித்த உபதேசங்கள் சத்தியமாக இருக்கிறது. (யோ. 8:31,32) ஆராதனையில் நமது முழு இருதயம், சத்தியத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். இதுவே உண்மை ஆராதனையின் அடையாளமாக உள்ளது.

பெந்தெகொஸ்தே நாளிலே மூவாயிரம் பேர்கள் சுவிசேஷத் திற்குக்கீழ்ப்படிந்து சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோன்னியத் திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப். 2:42) முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையின் போது தேவன் என்ன கட்டளையிட்டாரோ அவை களை மாத்திரம் செய்தனர். அதிலிருந்து கூட்டவோ, குறைக்கவோ இல்லை (வெளி. 22:18,19) அவர்களின் ஆராதனையில் ஐந்து விதமான தேவனுடைய கட்டளை இருந்தது. 1. அப்போஸ்தலரு டைய உபேதசம் 2. அப்பம் பிட்டுதல் (கர்த்தர் பந்தி) 3. ஜெபம் பண்ணுதல் 4. கொடுத்தல் (அப். 2:45) 5. துதித்துப் பாடினார்கள் (அப். 2:47) இவைகளைத் தவிர வேறு எதுவும் ஆராதனையில் இல்லை! ஐந்து கட்டளைகளை வாரத்தின் முதல் நாள் தோறும் கைக் கொண்டனர். (அப். 20:7; 1 கொரி. 16:1,2) இதில் ஏதோ ஒன்றைக் கூட தவறவிடவில்லை. அப்படித் தவறவிடுவது என்பது குற்ற மாயிருக்கிறது (யாக். 2:10) ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் அப்பம் பிட்டு ஆராதனை செய்ய வேண்டும் என்று தேவனுடைய கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஒவ்வொரு செயல்களுக்கும் வேத வசனத்தின்படி செய்யப்பட வேண்டும். (1பேதுரு. 4:11) நாம் மனிதரைப் பிரியப்படுத்தக் கூடாது, தேவனை மட்டும் பிரியப்படுத்த வேண்டும். ஆராதனையின் மையப் பொருளாக தேவன இருக்கின்றார். தேவன் நமக்கு இரண்டு புத்தகங் களைக் கொடுத்துள்ளார். அவை பழைய ஏற்பாடு, மற்றும் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாடு நமக்கு பாடப்புத்தமாக இருக்கிறது (ரோம. 15:4) புதிய ஏற்பாடு கைக்கொள்ளும்படி கொடுக்கப்பட்டுள்ளது (வெளி. 1:5). எனவே எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள புதிய ஏற்பாட்டை மட்டும் அணுகவேண்டும். உண்மையான ஆராதனையின் அடையாளம் புதிய ஏற்பாட்டில் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அடையாளம் கண்டு கொள்ள உண்மையான ஆராதனைக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, உலகத்தில் உள்ள பொய்யான ஆராதனைகளிலிருந்து மனந் திரும்பி மெய்யான ஆராதனைக்கு ஒப்புக்கொடுக்க தேவன் உங்களை வழிநடத்துவாராக!

**(தொடரும்)**

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. **பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | |
|---|---|---|---|
| இமயம் | TV | சனி | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. **அர்ச்சுணன்,** வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |


Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

# திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | காலை | 6:45 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.